கப்பியறை பேரூராட்சி அலுவலகம்.
கப்பியறை.

ந.க.எண்.302/2022/அ1,

நாள்.17.05.2022.

கப்பியறை பேரூராட்சி
கப்பியறை
629 156
கன்னியாகுமரி மாவட்டம்

## ஒப்பந்த அறிவிப்பு

கப்பியறை பேரூராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2021–22 –ல், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள இப்பேரூராட்சியில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 31.05.2022 அன்று பிற்பகல் 3.00 மணிவரை கப்பியறை பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபரால் பெற்றுக்கொள்ளப்படும்.

### பணிகள் விபரம்

| வ. எண். | பணி விபரம் | மதிப்பீடு (லட்சத்தில்) | ஒப்பந்த நமூனா கட்டணம் | டெண்டர் டெப்பாசிட் |
|---|---|---|---|---|
| 1 | கப்பியறை பேரூராட்சி – 3–வது வார்டு கூவரவிளை பகுதியில் பழுதடைந்த ஆலத்துறை மையம் எண்.215 (இருப்பு கூவரவிளை) அங்கன்வாடி மையத்தை அகற்றி புதிய அங்கன்வாடி மையம் கட்டுதல். | 11.00 | 1580 | 11000 |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tenders.tn.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாகஎடுத்துக் கொள்ளலாம், இந்த இணையதள முகவரிகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களும் பெறலாம். அல்லது ஒப்பந்த புள்ளி படிவங்களை பேரூராட்சி அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி விண்ணபத்தின் பேரில் 30.05.2022 காலை 5.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
2. பெறப்பட்ட புள்ளி படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு மூடி முத்திரையிடப்பட்டு, உறையின் மேல் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு 31.05.2022 பிற்பகல் 3.00 மணிக்குள் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.
3. தொழில்நுட்பதகுதி உறை, விலைப்புள்ளி உறை என இருஉறை முறையில் ஒப்பந்தபுள்ளி சமர்ப்பிக்கவேண்டும்
4. ஒப்பந்தத்துடன் டேவணி செலுத்தியதற்கான ரசீது இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
5. ஒப்பந்தத்தில் அடித்தல், திருத்தல் இருக்கக்கூடாது. டேவணி இல்லாத ஒப்பந்தங்களும், காலதாமதமாகப் பெறப்படும் ஒப்பந்தங்களும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
6. பெறப்பட்ட ஒப்பந்தங்கள் 31.05.2022 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்பட்டு, குறைந்த ஒப்பந்த புள்ளி ஏற்றுக் கொள்ளப்படும்.
7. வேலைக்கான உத்தரவு பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர் ரூ.20/– க்கான முத்திரைத் தாளில் அலுவலருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

8. திட்டபணி ஆதலால் திட்டநிதி வழங்கும் பட்சத்தில் தொகை விடுவிக்கப்படும், பொதுநிதியில் விடுவிக்கப்படமாட்டாது. மேலும் சட்டமன்றஉறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என்பதால் முதலில் 75% தொகை விடுவிக்கப்படும். பின்னர் 25% தொகை வழங்கப்பட்ட பின்புதான் ஒப்பந்தத்தாரருக்கு தொகை விடுவிக்கப்படும்

9. ஒப்பந்தப் புள்ளிகள் தொடர்பாக அவ்வப்போது வழங்கப்படும் அரசு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது அறிவுரைகள் முழுமையாக பின்பற்றப்பட வேண்டும்.

10. குறைந்த ஒப்பந்த புள்ளி பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

11. கூடுதல் விபரங்கள் வேண்டுவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

17/05/22

செயல் அலுவலர்,
கப்பியறை பேரூராட்சி.

17/5/22

பெறுநர்:

1. கப்பியறைப் பேரூராட்சியில் பதிவு பெற்றுள்ள அனைத்து ஒப்பந்தக்காரர்கள்.
2. கிராம அலுவலகம், கப்பியறை.
3. செயல் அலுவலர்கள் கருங்கல், வாழ்வச்சகோஷ்டம், திருவிதாங்கோடு, மற்றும் முளகுமூடு பேரூராட்சி அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்ய.
4. இளநிலை பொறியாளர் (பேரூராட்சிகள்) கருங்கல்.
5. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) நாகர்கோவில், தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
6. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) நாகர்கோவில் அவர்களின் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
7. அலுவலக விளம்பர பலகை.